[1994 மே 5

535—

காடுகள் வளர்ச்சிக்கான ஆராய்ச்சி மையம் நிறுவுதல்.

*23343—திருமதி கே. மரியம் உல் ஆசியா :
மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காடுகள் வளர்ச்சிக்கான ஆராய்ச்சி மையம் நிறுவ அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது, எங்கு நிறுவப்படும் ?

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், வனத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) செங்கற்பட்டு - எம்.ஜி.ஆர். மாவட்டம், வண்டலூரில் மாநில வனம் மற்றும் வனவிலங்கு ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம் அமைப்பதற்கான பணிகள் 1990-91-ல் தொடங்கப்பட்டு தற்போது தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவில் வன வளம் பற்றிய ஆராய்ச்சி மையங்கள் 6 மட்டுமே இருக்கின்றன. மேலும் வரலாற்று அறிஞர் தரம்பால் அவர்கள் தன்னுடைய ஆய்வுக் கட்டுரையில் கூறியிருப்பது போல் 18-ஆம் நூற்றாண்டில், செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டத்தினுடைய மொத்த நிலப்பரப்பில் 6ல் 1 பங்கு காடுகள் நிறைந்திருந்ததாகவும், ஒவ்வொரு கிராமமும் காடுகளால் சூழப்பட்டிருந்ததாகவும் அவர் தன்னுடைய ஆய்வுக் கட்டுரையில் கூறியிருக்கிறார். மேலும், அப்படிப்பட்ட வரலாற்று ரீதியில் காடுகள் அதிகம் நிறைந்த செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டத்தில், நமது மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அங்கே வன ஆராய்ச்சி மையம் ஒன்று அமைக்க ஏற்பாடுகள் செய்திருப்பதை நாம் நினைக்கும்போது, உண்மையிலேயே அவ்வாறு காடுகள் நிறைந்த அந்த மாவட்டத்திலே நமது தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அங்கே வன ஆராய்ச்சி மையம் ஏற்படுத்த அந்த மாவட்டத்தைத் தேர்ந்தெடுத்திருப்பது பொருத்தமானது மட்டுமல்ல, மேலும் சரித்திரத்தின் பக்கங்களுக்கு சாகா வரம் தேடித் தந்த சிரஞ்சீவி தலைவி மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் என்பதை நிரூபித்து விட்டார்கள். மேலும், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் இந்த

மையம் அமைப்பதற்கான பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன என்பதைக் கூறினார்கள். இந்தத் திட்டப் பணிகளுக்கு இதுவரை அரசு எவ்வளவு செலவு செய்திருககிறது. மேலும் எத்தனை காலங்களில், எத்தனை ஏக்கர் பரப்பளவில், எவ்வளவு செலவில் இந்த மையம் அமைக்கப்படும் என்பதையும், இந்த மையம் எப்பொழுது செயல்படத் துவங்கும் என்பதையும், மேலும் அனைத்து நவீன வசதிகளுடன் இந்த மையம் ஏற்படுத்தப் படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மையம் சுமார் 35 கோடி ரூபாயில் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்டது. 17.5 கோடி ரூபாய் நம்முடைய திட்ட ஒதுக்கீட்டில் பெற்றுக்கொள்வது என்றும், 17.5 கோடி ரூபாய் அந்நிய உதவியினைக் கோரலாம் என்றும் முடிவு செய்யப்பட்டது. அதனுடைய அடிப்படையில் நாம் செயலாற்றி வந்தோம். இன்றைக்கு இருக்கின்ற விலைவாசிப் புள்ளிகளினுடைய அடிப்படையில் நாம் இதை மீண்டும் பரிசீலனை செய்ததில் தமிழகத்தினுடைய அல்லது இந்தியாவி னுடைய புகழ்மிக்க ஒரு ஆராய்ச்சி நிறுவனமாகக் கருதப் படுகிற, டாக்டர் எம். எஸ். சுவாமிநாதன் அவர்கள் தலைமை ஏற்று நடத்துகின்ற அந்த மையத்தினுடைய உதவியைக் கோருமாறு நம்முடைய டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆலோசனை வழங்கியதால், அவர்களுடைய ஆலோசனையைக் கோரியிருக்கிறோம். எனவே, புதியதாக இன்றைக்கு உரு வாக்கப்பட்டிருக்கின்ற சூழ்நிலையில் இதற்கு 35 கோடி ரூபாயிலிருந்து 50 கோடி ரூபாய் வரை தேவை என்கிற அளவுக்கு நம்முடைய ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

இதுகாறும் 93.5 லட்ச ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டம் 5 ஆண்டுகளுக்கு நடைபெற வேண்டும் என்பது நம்முடைய எண்ணமாக இருந்தது. போதிய நிதி ஒதுக்கீடு இல்லாத காரணத்தால் அதைச் செயலாக்க முடியவில்லை. இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் தொடராச் செலவு என்கிற அளவில் நில மேம்பாடு, அலுவலக ஆய்வுக் கூடங்கள், இயந் திரங்கள் வாங்குவதற்காக ரூ. 11.45 கோடியும், தொடர் செலவு என்கிற அளவில் மதிப்பூதியம், பயிற்சி, கள ஆராய்ச்சி, ஆய்வு ஆகியவைகளுக்காக ரூ. 26.55 கோடியும், ஆக நில மேம்பாடு மற்றும் ஆய்வுச்செலவுக்காக 12 கோடி ரூபாய் என்ற அளவில் மதிப்பீடு செய்யப்பட்டு அதன் அடிப்படையில் புதிதாக மாவட்டத்தில் 15 மையங்களை உருவாக்கும் கருத்துரு ஒன்று அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது.

முற்பகல் 11-10

<u>திருமதி கே. மரியம் உல் ஆசியா:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வனம் மற்றும் வன விலங்குகள் ஆராய்ச்சி மையம் அமைப்பதற்காக வகுக்கப்பட்ட திட்டத்திற்கு

[1994 மே 5

மத்திய அரசு அனுமதி அளித்துவிட்டதா? மேலும் அதை அமைப்பதற்கு சர்வதேச நிதி நிறுவனங்களின் நிதி உதவியும், உலக வங்கி மற்றும் யு.என்.டி.பி. என்ற ஐக்கிய நாடுகள் அமைப்பினுடைய சுற்றுச் சூழல் திட்டம் ஆகியவற்றின் உதவிகளை இந்த மையம் பெற்றுள்ளதா என்பதையும் அந்த மையத்தின் நோக்கம் என்ன, என்னென்ன ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன. அந்த ஆய்வுப் பணிகளுக்கான விஞ்ஞானிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கு மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தினுடைய நோக்கம் மண் தன்மையை அறிந்து உயரின மரங்களை உருவாக்குவது, தரம் தாழ்ந்த காடுகளைப் பசுமையாக்குவது, மக்களுடைய தேவைகளை அறிந்து அதிக விளைச்சல் தரக்கூடிய மரங்களை உருவாக்குவது ஆகியவை முக்கியமான லட்சியங்கள் ஆகும். இந்த அடிப்படையில் இந்த ஆராய்ச்சி மையம் செம்மையாகச் செயல்படுவதன் மூலமாக நம்முடைய நாட்டில் பசுமை நிறைந்த ஒரு வனச் சோலை உருவாகும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு ஜப்பான், அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளுடைய நிதி உதவிகளைக் கோருவதற்காக அரசினிடம் ஒரு கருத்துரு இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 536, திரு. வே. பெரியசாமி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

சட்டமன்றம் LEGISLATIVE வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

536—

அந்தியூர் அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துதல்

*2144—திரு. வே. பெரியசாமி:

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அந்தியூர் அரசினர் மேல்நிலைப் பள்ளி விளையாட்டு மைதானத்தில் ஒரு ஏக்கர் நிலத்தினை அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்குக் கொடுத்து, பெண்கள் பள்ளியை அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆணை பிறப்பிக்குமா?